## அரிசோனா



# எச்சரிப்பால் உயிர்பிழைத்தல்

*அந்த மனிதர் மேலே பார்த்தார். "உயிர்பிழைக்க விரும்பினால் குதித்துவிடுங்கள்" என்றார்.*

மரிஸாவுக்கு அதிகாலை 2:30 மணிக்கு விழிப்பு வந்தது. ஏனென்று காரணம் புரியவில்லை. வாஷிங்டனின் ஸ்போகேனில் அடுக்குமாடி குடியிருப்பின் மூன்றாவது தளத்தில் தனது அறையில் நன்றாகத் தூங்கிக்கொண்டிருந்தார். கழிப்பறைக்குச் சென்றார்.

ஒரு சில நிமிடங்கள் கழித்து, கழிப்பறையிலிருந்து படுக்கையறைக்கு நடந்துசென்றபோது, சன்னலுக்கு வெளியே மஞ்சள் நிறத்தில் ஏதோ தெரிந்தது. சன்னலைத் திறந்துபார்த்தால், அவருடைய படுக்கையறையின் வெளி சுவற்றிலிருந்து தீப்பிழம்புகள் தெரிந்தன. அவரது அடுக்குமாடி குடியிருப்பில் தீப்பிடித்திருந்தது.

மரிஸா தன்னிடமிருந்த இரண்டு நாய்களையும், மேகி, டெய்சி என்று பெயர்சொல்லி அழைத்தார்.

நாய்கள் இரண்டும் ஒரு மூலைக்குச் சென்றுவிட்டன. ஏதோ தவறு நடப்பதை அவை உணர்ந்துகொண்டன.

மரிஸா கட்டளையிட அவை வெளியறைக்கு வந்தன. முன்கதவைத் திறந்ததும், புகை உள்ளே புக ஆரம்பித்தது. உடனே கதவைப் பூட்டிவிட்டார்.

மரியா தன் நாய்களுடன் மாடியின் முகப்பு பகுதிக்குச் சென்றார். மூன்றாவது தளத்திலிருந்து பார்த்தபோது, கீழே மக்கள் அங்குமிங்கும் ஓடுவது தெரிந்தது. அந்த அடுக்குமாடி குடியிருப்புக்கு அருகிலேயே ஒரு பூங்கா உள்ளது; அங்கு வீட்டில்லாதவர்கள் தங்கியிருப்பார்கள். அவர்கள் ஒவ்வோர் அறையாகத் தட்டி, உள்ளே இருப்பவர்

களை வெளியே வரும்படி எச்சரித்துக் கொண்டிருந்தார்கள். அதில் ஒருவர் மும்முரமாகச் செயல்பட்டுக்கொண்டிருந்தார்; மரிஸா அவரை அழைத்தார்.

“உதவிசெய்யுங்கள்! எனக்கு என்னசெய்வதெனத்தெரியவில்லை. முன்வாசல்வழியாகவரமுடியவில்லை” என்று கத்தினார்.

அந்த மனிதர் மேலே பார்த்தார். “உயிர்பிழைக்க விரும்பினால் குதித்துவிடுங்கள்” என்றார்.

“என்னிடம் இரண்டு நாய்கள் உள்ளன”.

“அவற்றை கீழே எரிந்துவிடுங்கள்” என்றார்.

மரிஸா முதலில் ஒரு நாயைத் தூக்கி கீழே போட்டார், பிறகு அடுத்ததைத் தூக்கி கீழே போட்டார். பிறகு கம்பியைப் பிடித்து, இரண்டாம் தளத்தின் முகப்பு பகுதியில் குதித்தார். அங்கிருந்து தரையில் குதித்தார்.

கீழே குதித்ததில் இலேசான காயமும் சுளுக்கும் ஏற்பட்டது. அதையெல்லாம் அவர் கவனிக்கவில்லை.

இரண்டு நாய்களையும் பெயர் சொல்லிக் கூப்பிட்டார்.

நாய்கள் இரண்டும் பத்திரமாக தரையில் விழுந்ததாகவும், பூங்காவை நோக்கி ஓடினதாகவும் ஒருவர் சொன்னார்.

மரிஸாவுக்கு நிம்மதியாக இருந்தது. அவற்றின் பெயர்களைச் சொல்லிக்கொண்டே பூங்காவிற்குச் சென்றார்.

நாய்கள் எங்கும் தென்படவில்லை.

அப்போதுதான் தன்னுடைய அலைபேசி தன் அறையிலேயே இருப்பது ஞாபகத்திற்கு வந்தது. அவருடைய சகோதரரின் அலைபேசி எண் மட்டும்தான் மனப்பாடமாகத் தெரியும். மரிஸா வேறொருவருடைய அலைபேசியை வாங்கி, தன் சகோதரரை அழைத்தார். அவருடைய சகோதரர் பொதுவாகத் தூங்கினால்எழுந்திருக்கமாட்டார். ஆனால் அன்று, அலைபேசி அடித்ததும், எடுத்துவிட்டார்.

மரிஸா அங்கு நடந்த தீ விபத்து பற்றிச் சொல்லி விட்டு, உடனே வந்து, தன் நாய்களைக் கண்டுபிடிக்க உதவுமாறு கேட்டார்.

சகோதரர் வந்தார்; இருவரும் நாய்களைத் தேடி அலைந்தார்கள்.

தீயணைப்பு வண்டிகள் வந்தன.

“நாம் மீண்டும் பூங்காவிற்கே சென்று பார்க்கலாமென நினைக்கிறேன்” என்று மரிஸா சொன்னார்.

பூங்காவில், தன் நாய்களை பெயர்சொல்லி அழைத்தார்; மேகி ஓடி வந்தது. மரிஸாவுக்கு மகிழ்ச்சியாக இருந்தது! நாயைக் கட்டிப் பிடித்து அழுதார்.

டெய்சியைக் கண்டுபிடிக்க 17 மணி நேரம் ஆனது. முன்பின் தெரியாதவர்கள் எல்லாம் டெய்சியைத் தேடினார்கள். சமூக ஊடகங்களில் ஒரு விளம்பரமும் கொடுக்கப்பட்டது. உள்ளூர் தொலைக்காட்சியில் மரிஸாவைப் பேட்டி எடுத்து, ஒளிபரப்பினார்கள். காவல்துறை சார்பாகவும் அறிவிப்பு கொடுக்கப்பட்டது.

அன்று இரவு மரிஸாவின் சகோ

தரர் அவரை அழைத்து, டெய்சி கிடைத்துவிட்டதாகச் சொன்னார். தெருவில் டெய்சியின் பெயரைச் சொல்லிக்கொண்டே சென்றபோது, டெய்சி தன்னை அடையாளம் கண்டு, தன்னிடம் ஓடி வந்ததாகச் சொன்னார். நாயைக் கண்டதும் மரிஸா சந்தோஷத்தில் துள்ளியதை சுற்றியிருந்தவர்கள் தங்கள் கைப் பேசிகளில் படம்பிடித்தார்கள்.

மரிஸாவுக்கு அது அற்புதங் களின் இரவாக இருந்தது. தீவிபத் தில் அனைத்தையும் இழந்துவிட் டார். ஆனால் தேவன் அவரது உயி ரையும், அவரது இரண்டு நாய் களையும் காப்பாற்றினார்.

ஆனால் ஏன்?

அதுகுறித்து ஜெபித்தபோது, மரிஸாவுக்கு விசேஷித்த திட்டங் களை தாம் வைத்திருந்ததை தேவன் வெளிப்படுத்தினார். அது அவர் மனதிற்கு சமாதானமாக இருந்தது.

மரிஸா பதின்பருவத்தினர் மற்றும் சிறுபிராயத்தினரின் மன நலப்பிரிவில் பணிபுரிந்தவர். அமெ ரிக்க அரசாங்கத்திலும், செவந்த்-டே அட்வென்டிஸ்ட் சபையிலும் சிறார் சீர்திருத்த அதிகாரியாகப் பணியாற்றினார். ஆனால் கோவிட் பெருந்தொற்றின்போது, அவரது வேலை போனது. அது தப்பிக்க வழியே இல்லாததுபோன்ற ஒரு கடினமான அனுபவமாக இருந் தது.

அந்தப் பயங்கர வருத்தத்தி லிருந்து அந்தத் தீவிபத்து அவரை மீட்டது. தேவன் தன்னை அழைப் பதை உணர்ந்தார்; மீண்டும் சிறு வர்கள் மத்தியில் ஊழியம் செய்யத் தீர்மானித்தார்.

பல மாதங்களுக்கு பிறகு, அரி சோனாவில் ஹால்புருக் செவந்த் -டே அட்வென்டிஸ்ட் இந்தியன் பள்ளியில் மாணவியர் விடுதிக் காப் பாளராகப் பணியில் சேர்ந்தார். அங்கு மேகி மற்றும் டெய்சியின் உதவியுடன் அங்குள்ள மாணவி களைக் கவனித்து வருகிறார்.

இப்போது அதிக மகிழ்ச்சி யில் இருக்கிறார்.

## கதைக் குறிப்புகள்

- அரிசோனாவில் உள்ள ஹால் புருக்கை வரைபடத்தில் காட்டுங்கள்.
- மரிஸாவின் ஒரு சிறிய காணொளியை யூடியூபில் காண்பதற்கு: bit.ly/NAD-Marisa.
- முகநூலிலிருந்து புகைப்படங்களைப் பதிவிறக்க: bit.ly/fb-mq.
- வட அமெரிக்க டிவிஷனிலிருந்து ஊழிய விவரங்களையும் துணுக்குகளையும் பதி விறக்க: bit.ly/nad-2024.
- செவந்த்–டே அட்வென்டிஸ்ட் திருச்சபைசின் “ஐ வில் கோ” என்ற திட்டத்தின் பின் வரும் நோக்கங்களை இந்த ஊழியக்கதை விளக்குகிறது.
- ஆன்மிக வளர்ச்சியின் குறிக்கோள் எண். 2, ‘10/40 சாளரம் முழுவதும், பெரிய நகரங் களில், சத்தியம் சென்றிராத பகுதிகளிலும் சத்தியம் குறைவாகச் சென்றுள்ள பகுதிக ளிலும் அட்வென்டிஸ்ட் ஊழியத்தைப் பெலப்படுத்தவேண்டும்’.